






# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 1 இதழ் 22 28.05.2025



**आचार्य देवो भव (Aachayra Devo Bhava)**

# உள்ளே....

## படித்து பின்பற்ற
## வேண்டிய
## முத்துக்கள்
## உபதேசங்கள்

# உயர்ந்த முத்துக்கள்

1. ஆன்மாவைப் பூர்ணமாக உணர்ந்தவன் உலகியல் ஆசாபாசங் களிலிருந்து விடுபடுகிறான்.

2. "யார் எல்லா உயிரினங்களிலும் ஆன்மாவை அறிகிறானோ, ஆன்மாவை எல்லா உயிரினங்களிலும் காண்கிறானோ, அவன் உத்தமன். அவன் யாரையும் வெறுப்பதில்லை"

3. ஒரு பொருள் இயங்க, அதற்கு ஆதாரமாக ஒரு இயங்காத பொருள் வேண்டும். ரயில்கள் இயங்கும் சக்தி உள்ளவை! அதற்கு இயங்காத ஆதாரம் தண்டவாளங்கள். தண்டவாளங்களும் ரயிலுடன் சேர்ந்து ஓட நினைத்தால் என்னவாகும். அதுபோல அசைவற்ற ஆன்மா இயங்க, அதற்கு ஆதாரமாகப் பிராணனும், உடலும் தேவை.

4. "அரக்கர்களின் உலகம் எப்போதுமே இருள் சூழ்ந்தவை. ஆன்மாவை அறியாமல், அதன் இறையம்சத்தை அறியாமல் அதனை அழிப்பவர்கள் மரணத்திற்குப் பிறகும் அதே இருட்டான உலகங் களையே, அரக்க குணம் மாறாமல் அடைகிறார்கள்". ஆன்மாவை அழிக்க இயலாது. ஆன்மாவை தன்னுடைய இரக்கமற்ற செயல்களால், காரணமே யின்றி, பிறரைக் கொன்று தீர்ப்பவர்களைத்தான் இங்கு ஆன்மாவை அழிப்பவர்கள் என்று கூறப்படுகிறது.

5. மறுபிறவிகள் யாருக்கு? அதாவது புனர் ஜன்மம் யாருக்கு? ஆசை வசப் பட்டு, உடம்பு, மனம் ஆகியவைகளு டன் தம்மைப் பிணைத்துக் கொண்டு, சுகபோகங்களை நாடி, வெளி வளர்ச்சி யில் மட்டும் கவனம் செலுத்துவோர்கள் மட்டும் மறுபிறவிகளுக்கு உள்ளாகிறார்கள். அப்போது மறு பிறவியற்ற வர்கள் யார்? மனம் அகம் நோக்கி (உள்நோக்கி) ஆன்மாவுடன் ஒன்று படுத்திக் கொண்டு, அதனை அறிபவர் களுக்கு மட்டுமே மறுபிறவி இல்லை.

6. இறைவனை பற்றி மூன்று மந்திரங்கள் கூறுகின்றன.
1. இறைவன் ஒளி வடிவானவன். அவ னுடைய ஒளியாலேயே எல்லாம் ஒளி பெறுகின்றன.
2. அதோ பார்! அவர்தான் இறைவன் என்று சொல்லி ஒரு அடையாளத்தைக் காட்ட முடியாது.
3.ஏனெனில், இறைவன் சரீரமற்றவர். ஒளிமயமானவர். அவர் பரிபூரணர்! தூய்மையானவர். அவரிடம் எந்தப்பாவமும் அணுகாது. அவர் உலகின் கண் போன்றவர். இதையேதான் "ஸூர்யோ யதா ஸர்வ லோகஸ்ய சக்ஷு :" என்று கூறப்படுகிறது. ஆன்மா எப்படி ஒருவனுடைய சுக துக்கங்களால்

பாதிக்கப்படுவதில் லையோ, அதுபோலத்தான் இறைவனும். ஆன்மாவை அறிந்தவன்தான் இறை வனை அடைகிறான்.

7. **உபநிஷதங்கள்::**

1) வேதங்களின் ஒரு பகுதியான பிராம்மணங்களுடன் சேர்ந்து எழுதப் பெற்றது உபநிஷதங்கள், என்று கூறப்படுகின்றன. இதன் பிரதான நோக்கம் வேதங்களின் ரஹஸ்யமான பொருளைக் கூறுவது தான் :
"உபநீய தமாத்மானம் பிரம்மாபாஸ்தத் வயம்
யத:"
"நிஹத்யவித்யாம் தஜ்வம் ச தஸ்மாத் உபநிஷத்பவேத்"
2) பிரம்மத்தின் நிஜஸ்வரூபத்தை அறிய உதவும் புனிதமான நூல்கள்.
3) மந்திரப் பிரயோகங்களின் நிஜமான, முறையான வழிமுறைகள்.
4) மதம் தொடர்பான புனிதமான நூல்கள்
5) மறைபொருளை நாடும் நூல்களுக்கு உபநிஷதங்கள் எனப்பெயர்.
6) நவீன காலங்களில் தோன்றிய நூற்றுக்கணக்கான உபநிஷதங்கள் வேதத்தைச் சேர்ந்ததில்லை.

8. **தவம் ::**

உண்மை பேசுதல் தவம், உண்மை யாக நடத்தல் தவம், கேள்வி தவம், அமைதி தவம், புலனடக்கம் தவம், மனவடக்கம் தவம், ஈகை தவம், வேள்வி செய்தல் தவம், பிரம்மத்தை உபாசித்தலும் தவம்.

9. கடலிலிருந்து அலைகள் தோன்று வதைப்போல் அந்த பிரம்மமாகிய கட லிலிருந்து இந்த உலகம் தோன்றியது. அந்தப் பரம்பொருளின், ரகசிய நாமமாகிய ஓங்காரத்தை ஜபித்து ஒருவன் சாகா நிலையை அடைகிறான்.
அந்தப் பிரம்மம் ஞானிகள், வேதங்கள், வேதங்கள் ஓதுவோரின் நாவில் உறைவது. அது அகாரம், உகாரம், மகாரம், ஆகியவைகளின் நாதமாகிய மூன்று கொம்புகள் உடையது. ஒரு வெண்மையான விருஷபம் போன்றது.
விழிப்பு என்னும் பிரம்ம தத்துவத்தை உரக்கக் கூவி விளக்குவது, விழிப்பு, கனவு, உறக்கம் என்ற மூன்று நிலைகளி லும் வைக்கப்பட்டுள்ளது. ஆசாரியர்களால் இரகசியம் என்று வைக்கப் படுகிறது, அல்லது கருதப்படுகிறது. உதாரணமாகப் பாலை நாம் பாலாகவே பார்க்கிறோம். ஆனால், அதனை மோர் ஊற்றித் தோய்த்து, அதைத் தயிராக்கி, அதிலிருந்து வெண்ணை திரண்டு, அந்த வெண்ணையை உருக்கும்பொழுது அதிலிருந்து கடைசியாக "நெய்" தோன்றுகிறது. அந்தப் பாலில் நெய் போன்று

"பிரும்மம்" இரகசியமாகவே இருக்கிறது. ஆனால், எங்கும் நிறைந் திருப்பது.

10. கர்மாக்களால், மக்கட்பேரால், பொருளால், அந்தப் பிரம்மத்தை அடைய முடியாது. தியாகத்தால் மட்டும் சாகா நிலையை அடையலாம்.

11. செழிப்பான வேதாந்த அறிவு ஒருவருக்கு அவசியம். அந்த அறிவு எளிதில் கைப்பெறுவதில்லை. அதற்கு உறுதியான மனநிலை வேண்டும்.

12. ஒரு துறவி 'ஓங்' காரத்தை ஜபித்துக் கொண்டு ஆன்மாவைத் தியானிக்க வேண்டும். இதுதான் தேவரகசியம். அவன் தான் பிரம்மத்தின் மகிமையை அடைகிறான்.

13. **ஸ்ரீ பகவான்** சுத்தனாய் ஸர்வவிலக்ஷணனாய் ஜ்ஞாநானந்தஸ்வரூபனாய் குறையொன்றுமில்லாத குணக்கடலாய், திவ்யமங்கள விக்ரஹமென்ற திருமேனி, அற்புதமான பூஷணம், ஆயுதம், பெரியபிராட்டி இருவிபூதிகள் எல்லாம் உடையனாகி எப்போதும் நித்ய ஸூரிகளால் நுவலப் படுகின்றவன், தான் படைக்கும் ப்ரஜைகளின் க்ஷேமத்திற்காகப் பல அவதாரங்கள் செய்கின்றவன், ஸ்ரீக்ருஷ்ணாவதாரம் செய்து பல மஹான்களை பாகவேதோத்தமர்களாக்கியதோடு அர்ஜுனனைப் போரிலிழிய உத்ஸாஹப் படுத்துவது வியாஜமாக, உலகமே உய்வதற்காக, ஜீவாத்மாவைக் காண்பதற்கான கர்மயோகம் ஞானயோகமென்ற உபாயங்களையும் தன்னைப் பெறுவதற்காகப்பிறகு செய்ய வேண்டும் பக்தி யோகத்தையும் உபதேசித்தான். அதே பகவத்கீதை.

---

## 14.ஸ்ரீமந்நாராயணனே பரதெய்வம்

---

ந பரம் புண்டரீகாக்ஷாத் த்ருச்யதே புருஷர்ஷபா
ந வாஸுதேவாத் பரமஹஸ்தி மங்களம்
ந வாஸுதேவாத் பரமஸ்தி பாவநம்
ந வாஸுதேவாத் பரமஸ்தி தைவதம்
ந வாஸுதேவம் ப்ரணிபத்ய ஸீததி
ந தைவம் கேசவாத்பரம்
என்று மஹர்ஷிகள் நாராயணனே பரதெய்வம் என்றார்கள்.

---

15. **ஸ்வாஹா, ஸ்வதா - இருவரும் அக்னியின் தர்மபத்னிகள்**

மங்கள கார்யங்களில்.... ஸ்வாஹா
பித்ரு கார்யங்களில் .... ஸ்வதா

அக்னி - ஹவ்ய வாஹனன் (சுப கார்யங்களில்)
கவ்ய வாஹனன் (பித்ரு கார்யங்களில்)

**********************